


# ஆகஸ்ட் 24
# புனித பர்த்தொலோமெயு, அப்போஸ்தலர்

இவரது பெயரின் பொருள் ‘தொலோமெயு’. இவரது பழைய பெயர் நத்தானியேல் இவரை முதலில் இயேசுவிடம் அழைத்து வந்தவர் பிலிப். நாசரேத்தூரில் இருந்து நல்லது எதுவும் வரக் கூடுமா என்று இவர் வினவினார். கபடற்றவர் என்று இயேசு இவரைப் பற்றி கூறினார். “ராபி, நீர் கடவுளின் மகன். நீரே இஸ்ராயேலின் அரசர்” என்று இவர் இயேசுவிடம் மொழிந்தார். இவர் கிழக்கத்திய நாடுகளின் மிக இக்கட்டான இடங்களில் வேதம் போதித்தார். புனித பந்தனேயுஸ் என்பவர், மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவுக்குச் சென்றார். புனித மத்தேயு எழுதிய சுவிசேஷ நூலை புனித பர்த்தொலோமெயு அங்கு கொண்டு வந்ததாக கிறிஸ்தவர்கள் உறுதியாகக் கூறினார்கள் என யுசேபியுஸ் கூறுகிறார். லிக்கவோனியா நாட்டிலும் இவர் வேதம் போதித்ததாக புனித கிறிசோஸ்தோம் கூறுகிறார். கடைசியாக இவர் வேதம் போதித்தது பெரிய அர்மேனியாவில் என புனித தூர்ஸ் நகர் கிரகோரியார் கூறுகிறார். அங்கு மக்கள் விக்கிரக ஆராதனை செய்து வந்தார்கள். அவர்கள் இவரைப் பிடித்து சிலுவையில் அறைந்து கொன்றதாகச் சொல்லப்படுகிறது. இவரது புனித பண்டங்கள் உரோமைக்கு அருகில் ஓடும் தைபர் நதியில் உள்ள தீவில் கட்டப்பட்டிருக்கும் புனித பர்த்தொலோமெயு ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

**சிந்தனை:** உலகில் உங்களுக்கு வேதனை உண்டு. ஆயினும் துணிவுடன் இருங்கள். நான் உலகை வென்று விட்டேன். (அருளப்பர் 16:31)

**செபம்:** ஆண்டவரே, நாங்கள் கள்ளம், கபடற்றவர்களாய் வாழும் வரம் தாரும்.